# ஐங்குறுநூறு பாடல்களில் சுயமும் படிமமும் – ழாக் லக்கானை முன்வைத்து

# Self and imagery in the Ainkurunuru poems – based on Jacques Lacan

3

மோனிஷா. ஜெ.சி, தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர்.

**Monisha. J.S,** Department of Tamil, RVS College of Arts and Science, Sulur.

**ORCID: https://orcid.org/0009-0005-8919-4124**

**DOI:** 10.5281/zenodo.18737785

**Abstract**

*Sangam literature stands as a treasure trove that reveals the life and culture of the Tamils to the world. These literary works have permeated the hearts of the Tamils through symbols. The Sangam poets have depicted the lives of the hero and heroine through imagery. They have expressed their imaginative abilities by using natural objects as symbols for emotions of love. The fundamental basis for these symbols is language. It is this language that contains the signifiers. This is what Jacques Lacan refers to as encompassing everything. Jacques Lacan is a significant figure in psychology after Freud. His concepts of signifier and signified have had a profound impact on psychology. In this context, this article examines the role of language in the Sangam-era human life, which is structured by signifiers and signifieds, and the expressions of the hero and heroine through signifiers, based on the poems of Ainkurunuru.*

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியலை உலகிற்கு எடுத்துரைக்கும் பெட்டகமாக நிலைத்திருக்கிறது. தமிழர் உள்ளங்களை இந்த இலக்கியங்கள் குறியீடுகளின் வாயிலாக பரவவிட்டிருக்கின்றன. தலைவன், தலைவியின் வாழ்வியலை சங்க காலப் புலவர்கள் படிமங்களின் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர். காதல் உணர்வுகளுக்கு இயற்கைசார் பொருட்களை குறியீடாகப் பயன்படுத்தி தங்களது கற்பனைத் திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தக் குறியீடுகளுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது மொழிதான். இந்த மொழிதான் குறிப்பான்களைக் கொண்டிருக்கின்றன. இதுதான் அனைத்தையும் ஆழ்வதாக ழாக் லக்கான் குறிப்பிடுகின்றார். ஃப்ராய்ட்க்குப் பிறகு உளவியலில் முக்கியமானவராகத் திகழ்பவர் ழாக் லக்கான் ஆவார். அவரது குறிப்பான், குறிப்பீடு என்பது உளவியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவையாகும். அவ்வகையில் குறிப்பான், குறிப்பீடுகளால் கட்டமைக்கப்பட்ட சங்க கால மனித வாழ்வியலில் மொழி வகிக்கும் பங்கையும் தலைவி, தலைவனின் குறிப்பான் வெளிப்பாடுகளையும் ஐங்குறுநூறு பாடல்கள் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

**Key words :** *Sangam*, லக்கான், சுயம், பிம்பம், தலைவன், தலைவி, ஐங்குறுநூறு

## முன்னுரை

சங்க அகப் பாடல்கள் மனித மன உணர்வுகளைக் குறிப்பான்களால் வெளிப்படுத்துகின்றன. இன்பம், சோகம், பிரிவு, காத்திருப்பு, வருத்தம் என்ற காதல் உணர்வு வெளிப்பாடுகளை

இப்பாடல்கள் பிணைத்து வைத்திருக்கின்றன. இந்த உணர்வுகளை வெளிப்படுத்த புலவர்கள் மொழி விளையாட்டை நிகழ்த்துகின்றனர். பேரின்ப எண்ணப்பாடுகள் கொண்ட மனித சுயத்தை சமூகம், குறிப்பான்களால் கட்டுப்படுத்துகிறது. சங்க காலத் தலைவன், தலைவி சுயமானது சமூகத்தால் கட்டுப்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. வீட்டுக்காவல், பிரிவு, ஊடல் போன்றவை சுயத்தை மட்டுப்படுத்துகிறது. ஆணுக்குப் போர், அறச்செயல், பொருளாதாரம் போன்றவை சுயத்தைக் கட்டுப்படுத்துகிறது. இவை மற்றமைகளால் உருவாக்கப்பட்டவையாகும். சுயமற்ற மனிதன் என்பது கிடையாது. இந்தச் சுயத்தைக் கட்டமைப்பது மொழிதான். அது குறிப்பான், குறிப்பீடுகளின்வழி மனித மனத்தை ஒடுக்குகிறது. அவ்வகையில் ஐங்குறுநூறு பாடல்களில் மனித சுயம் மொழியால் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதையும் படிமங்கள் குறிப்பானாக வெளிப்படும் சூழலையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**லக்கானின் கண்ணாடி நிலை**

ழாக் லக்கான் ஒரு பிரெஞ்சு மனோதத்துவ ஆய்வாளர் மற்றும் தத்துவஞானி ஆவார். அவர் சிக்மண்ட் ஃப்ராய்டின் கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்து, மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ''கண்ணாடி நிலை'' மற்றும் ''உண்மையான, கற்பனை, குறியீடு'' போன்ற முக்கிய கருத்துக்களை உருவாக்கினார். மனித சுயமானது மொழியால் கட்டமைக்கப்படுகிறது என்றும், நனவிலி என்பது மொழியின் ஒரு வடிவமாகும் என்றும் அவர் வாதிட்டார்.

குழந்தை தனது பிம்பத்தைக் கண்ணாடியில் முதல் முறையாகப் பார்க்கும்போது, அது தனது உடல் பற்றிய ஒரு பிம்பத்தைக் கட்டமைக்கிறது. இந்த பிம்பம் ஒரு ஒருங்கிணைந்த சுயத்தின் தொடக்கமாகும். ஆனால் உண்மையில் சுயமானது ஒருபோதும் முழுமையானதாக இருக்காது என்று லக்கான் கூறுகிறார்.

''சுயம் என்பது உண்மையில் நமக்குள் ஏற்கனவே இருக்கும் விஷயம் அல்ல; அது வெயியிலிருந்து மற்றமை (அதர்) யால் கட்டமைக்கப்படுவது என்பதே கண்ணாடி கட்டம் சொல்லும் செய்தி.'' *(2007. ப. 17)*

என்ற லக்கானின் கோட்பாட்டை எடுத்துரைக்கிறார் எம்.ஜி.சுரேஷ். சுயத்தை விளக்க மேற்கூறிய மூன்று வகையான நிலையை லக்கான் முன்வைக்கிறார்.

**1. உண்மையானது (The Real)**

வார்த்தைகளால் முழுமையாக விவரிக்க முடியாத அனுபவத்தின் அடிப்படை நிலை.

**2. கற்பனை (The Imaginary)**

பிம்பங்கள் மற்றும் சுய பிம்பங்களுடன் தொடர்புடையது. (கண்ணாடி நிலை போன்றவை)

**3. குறியீடு (The Symbalic)**

மொழி, சட்டம் மற்றும் கலாச்சாரம் போன்ற குறியீட்டு அமைப்பு

இந்த மூன்று ஒன்றோடொன்று பிணைந்துள்ளன என்கிறார் லக்கான். ஃப்ராய்ட் முன்வைக்கும் இத், ஈகோ, சூப்பர் ஈகோ என்பதற்கு மாற்றாக இதை முன்வைக்கிறார். லக்கான் குறிப்பிடும் மூன்றில் தான் மனிதன் வாழ்கிறான் என்பது அவரது கருத்து. மனிதர்கள் குறிப்பான்களால் ஆளப்படுகின்றனர். அனைத்தும் மொழியால்தான் இயங்குகின்றன. சுயம் என்பது வெளியில்

இருக்கிறது. மற்றமையால்தான் ஒருவரின் சுயம் கட்டமைக்கப்படுவதாக விளக்குகிறார்.

மற்றமையை சிறிய மற்றமை, பெரிய மற்றமை என்று பிரிக்கிறார். முதலாவது கற்பனை இரண்டாவது மொழி ஆகும். இவை மனிதனின் அகநிலைக்குள் புனைவுகளையும் படிமங்களையும் உற்பத்தி செய்கின்றன.

**ஐங்குறுநூறில் லக்கான் முன்வைக்கும் சுயமும் படிமமும்**

சங்க கால அகம், புறம் சார்ந்த பாடல்கள் அனைத்தும் குறிப்பான்களால் நிரம்பியிருக்கின்றன. இந்தக் குறிப்பான்கள் மொழியிலிருந்து தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இவைதான் மனித சுயத்தைக் கட்டமைக்கின்றன. இந்தச் சுயங்கள் மற்றமையிலிருந்து உருவாக்கப்படுகின்றன. சமூகத்தினாலும் மொழியினாலும் கட்டமைக்கப்பட்டது தான் ‘சுயம்’ என்பது லக்கானுடைய கொள்கையாகும். குறிப்பான்கள் பன்முக அர்த்தங்களைக் கொண்டவை.

‘நான் எங்கு இல்லையோ அங்கிருந்து சிந்திக்கிறேன், அதனால் சிந்திக்காத இடத்தில் நான் இருக்கிறேன்” (2018, ப. 159) என்று கூறுகிறார் லக்கான். சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்கள் பெரும்பாலும் பிரிந்து சென்ற தலைவன் செல்லும் வழிகள் குறித்து தலைவி கூறுவதாகவும் தலைவன் கார்காலம் தொடங்கிய சூழலில் அவன் கண்ட அனைத்தையும் தலைவிக்குக் குறிப்பீடாக எண்ணுவதுமாகவும் அமைந்துள்ளன. இந்த சிந்தனைகளே குறிப்பான்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. அதாவது தலைவியோ, தலைவனோ உடன் இல்லையென்றாலும் அவர்கள் எங்கு இருக்கிறார்களோ அகநிலையில் அங்கு இருப்பதுபோல சிந்திக்கின்றனர். லக்கான் மொழியில் கூறுவதென்றால்,

“மனிதன் என்பவனை அகனிலையாகவும் சொல்லைக் குறிப்பான் என்றும் அழைக்கிறார்.” (2007, ப. 15) மேலும் அகனிலையைக் குறிப்பான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று விளக்குகிறார். தலைவியின் சுயம் என்பது தலைவன் எனும் மற்றமையால் கட்டமைக்கப்பட்டிருப்பதை ஐங்குறுநூறு பாடல்களில் காணமுடிகிறது. அவ்வகையில் பாலைத்திணைப் பாடல்,

**அம்ம வாழி, தோழி! சிறியிலை**
**நெல்லி நீடிய கல் காய் கடத்திடை,**
**பேதை நெஞ்சம் பின் செல, சென்றோர்**
**கல்லினும் வலியர் மன்ற**
**பல் இதழ் உண்கண் அழப் பிரிந்தோரே.** **(ஐங். 334)**

இவ்வாறு தலைவன் பிரிந்து சென்ற துயரத்தை தலைவி வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சிறிய இலைகளுடன் கூடிய நெல்லி மரங்கள் நிறைந்த பாலைநில வழியில் சென்றுள்ளார். பேதை என் நெஞ்சம் அவரைப் பின்தொடர்ந்து செல்கிறது. பூவிதழ் போன்ற என் கண் அழுகிறது என்று தலைவி தோழிக்குக் கூறுகிறாள். தனது அகநிலையும் சிந்தனையும் தலைவனைப் பின்தொடர்ந்து செல்வதாக கூறுமிடத்தில் தலைவி தான் இல்லாத இடத்தில் இருந்து சிந்திப்பதாக நோக்கமுடிகிறது. அதனைப் பொருட்படுத்தாமல் சென்ற அவர் நெஞ்சம் கல்லைக் காட்டிலும் இறுக்கமானது என்று கூறுமிடத்தில் அவளது தேவை வேட்கையாக மாறிவிடுகிறது. அதேசமயம் தலைவின் சுயம் என்பது சிதைவிற்குள்ளாகிறது. குடும்பம் என்ற அமைப்புதான் தலைவியின் சுயத்தைக் கட்டமைக்கிறது. அதில் குறிப்பாக தலைவனின் குறிப்பான்கள்தான் தலைவியின் சுயமாக உருவெடுக்கிறது. இதில் தலைவன் தன்னுடன் இல்லை என்பதை தலைவியின் மனம் ஏற்க மறுக்கிறது. அதனால் அது நனவிலிக்குள் அமுக்கப்பட்ட ஆசையாக நிலைகொள்கிறது.

இதேபோல் கார்காலம் தொடங்கி விட்டதை அறிந்த தலைவன் தான் காணும் அனைத்தும் தலைவியின் பிம்பத்தை நினைவுபடுத்துவதாக எண்ணிக்கொள்வதை,

**நின்னே போலும் மஞ்ஞை ஆல, நின்**
**நல் நுதல் நாறும் முல்லை மலர,**
**நின்னே போல மா மருண்டு நோக்க,**
**நின்னே உள்ளி வந்தனென்**
**நல் நுதல் அரிவை! காரினும் விரைந்தே. (ஐங். 492)**

என்ற முல்லை நிலப் பாடல் எடுத்துரைக்கிறது. மயில் உன்னைப் போல அடுவதைப் பார்த்தேன். முல்லை உன் நெற்றியைப் போல மணப்பதை உணர்ந்தேன். மான் உன்னைப் போல மருண்டு நோக்குவதைப் பார்த்தேன் என்று தலைவனின் மனம் தலைவின் பிம்பத்தை மயில், முல்லைப்பூ, மான் போன்றவற்றுடன் பொறுத்திக் காண்கிறது. அதனால், உன் நினைவு வந்தது, கார் மேகத்தைக் காட்டிலும் விரைவாக வந்துவிட்டேன் என்று கூறுகிறான். இது லக்கான் கூறும் பிம்பத்தின் ஆதிக்கம் என்பவற்றுடன் பொருந்துகிறது. அதாவது தலைவியின் மனதிற்குள் சிறைபடுத்தப்பட்ட தலைவனின் காதல் அவனை தலைவியை நோக்கி உந்தித்தள்ளுவதாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. மயில், முல்லைப்பூ, மான் போன்றவை இங்கு அதன் அர்த்தத்திலிருந்து மாறி தலைவிக்குக் குறிப்பீடாகிறது. இந்தக் குறிப்பான்கள் மென்மைத் தன்மை கொண்டது. பெண்கள் மீது கட்டமைக்கப்பட்ட மென்மைத் தன்மை படிமங்கள்தான் தலைவனின் எண்ணத்தில் படிந்திருக்கின்றன. அவைதான் அவற்றை கண்டவுடன் தலைவியின் ஞாபகத்தைத் தூண்டியுள்ளது. இதை,

“நாம் படிமங்களால் கட்டுப்படுத்தப்பட்டவர்கள். பின்னர் சொற்கள் என்னும் குறியீடுகளால் நிர்வகிக்கப்படுபர்கள்” (2007. ப. 21) என்ற லக்கானின் கூற்று உறுதிபடுத்துகிறது.

தலைவி, தலைவன் இருவரும் மொழியின் வழியாக உரையாடலை நிகழ்த்துகின்றனர். மொழிதான் அவர்களை வழிநடத்துகிறது. குறிப்பான்கள் அவர்களின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. இந்தக் குறிப்பான்கள் உணர்த்தும் பொருட்களை இன்றைய சூழலில் நேரடியாகப் புரிந்து கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. உரையாசிரியர்களின் குறிப்பான்கள் வழிதான் பெரும்பாலும் தலைவன், தலைவியின் குறிப்பான்கள் வழிநடத்தப்பட்டு வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

அதேபோல் சமூக வெளியில் பயன்படுத்தப்படும் குறிப்பான்களில் தணிக்கைகள் காணப்படுகின்றன. ஆண்களுக்குப் பயன்படுத்தப்படும் குறிப்பான்களுக்கு இணையாக பெண்களுக்கு குறிப்பான்கள் இல்லை. எடுத்துக்காட்டாக, வீரன் என்று ஆணைக் குறிக்கும் குறிப்பானுக்கு இணையாக பெண்ணைக் குறிக்கும் குறிப்பான் இல்லை.

அதேபோல் பரத்தை என்று பெண்ணைக் குறிக்கும் குறிப்பானுக்கு இணையாக ஆணுக்கு இல்லை. ஆணுக்கு உயர்வானது, பெண்ணுக்கு இழிவானது. இவ்வாறு மொழி என்பது ஆணாதிக்கக் குறிப்பான்களால் நிறைந்திருக்கின்றன என்பதை லக்கான் வழி புரிந்துகொள்ள முடிகிறது.

**அடக்கப்பட்டதின் திரும்பல்**

சங்க காலத்தில் பரத்தையை ஆண் நாடிச் செல்லுதலும் கூடி இருத்தலும் ஒழுக்கமாய் இருந்தது. பரத்தையிடம் சென்று வந்த தலைவனிடம் தலைவி ஊடல் கொள்வதை,

**பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்**
**வாளை நாள் இரை பெறூஉம் ஊர!**
**எம் நலம் தொலைவது ஆயினும்**
**துன்னலம் பெரும! பிறர்த் தோய்ந்த மார்பே.** **(ஐங். 63)**

இப்பாடல் காட்சிப்படுத்துகிறது. பொய்கையில் புலால் நாற்றம் வீசும் நீர்நாயானது வாளைமீன் இரையை எளிதாகப் பெறும் ஊரன் நீ. என் நலமெல்லாம் அழிவதாயினும் சரி. பிற பெண்களைத் தழுவிய உன் மார்பை நான் தழுவமாட்டேன் என்று கூறி மனைவி ஊடல் கொள்கிறாள். இதில் தலைவி தலைவனிடம் கோபமாக பேசுவதாக நோக்கினாலும் மற்றொரு கோணத்தில் அவளது ஆற்றாமை குறிப்பான்களாக வெளிப்படுவதை உணரமுடிகிறது. தலைவன் பரத்தைமையை நாடிச் சென்றது தலைவிக்கு அதிர்ச்சியான ஒன்று. அந்த வலி மனதை விட்டு அகலாமல் மொழிவழியாக வெளிப்படும்போது அது அடக்கப்பட்டதின் திருப்புதலாக மாறுகிறது.

**முடிவுரை**

ஐங்குறுநூறு பாடல்களில் தலைவியின் உள்ளம் சமூகம் கட்டமைத்து வைத்துள்ள கருத்தியல்களுக்கு ஏற்ப செயல்படுவதைக் காணமுடிகிறது. தலைவியின் சுயம் தலைவன் எனும் மற்றமையால் கட்டமைக்கப்பட்டிருப்பதால் அவளது சுயம் அவனுடனேயே பயணப்படுவதாய் எண்ணிக்கொள்கிறாள் தலைவி. அதாவது தான் இல்லாதவிடத்திலிருந்து சிந்திக்கிறேன் என்பதாக அமைந்துள்ளது.

தலைவன் தலைவிக்கு சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட குறிப்பான்களையே பயன்படுத்துகிறான். தான் பார்த்த குறிப்பீடுகள் அவனுக்கு படிமங்களாக உருமாறி அது தலைவிக்கு ஒப்பீடாகிறது. அதாவது பெண் என்றால் மென்மை என்பதற்கேற்ப அதற்குரிய படிமங்களை அவனது உள்ளம் நோக்கச் செய்திருக்கிறது என்பதை லக்கான் வழி அறியமுடிகிறது.

பரத்தமை என்று பெண்ணுக்கு குறிப்பிடப்படும் குறிப்பான் போல ஆண்களுக்கு இல்லை. தலைவியின் ஆற்றாமை தலைவனுடன் ஊடலாக மாறி அதற்குரிய குறிப்பான்களாக வெளிப்படுகின்றன என்பதை அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. இரவிச்சந்திரன், தி.கு., 2018. ஃப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், முதற்பதிப்பு, புத்தாநத்தம். அடையாளம் பதிப்பகம்.

2. சுரேஷ், எம்.ஜி., 2007. லக்கான், முதற்பதிப்பு, புத்தாநத்தம். அடையாளம் பதிப்பகம்.

3. …………, 2016. ஐங்குறுநூறு (புலியூர் கேசிகன் உரை), மூன்றாம் பதிப்பு. சென்னை. சாரதா பதிப்பகம்.


**Bibliography**


*1. Ravichandran, T.K., 2018. Freud, Jung, Lacan: An Introduction and Guide, First Edition, Puththanatham. Adaiyalam Publications.*

*2. Suresh, M.G., 2007. Lacan, First Edition, Puththanatham. Adaiyalam Publications.*

3. …………, 2016. *Ainkurunuru (Commentary by Puliyur Kesikan), Third Edition. Chennai. Saradha Publications.*

**Cite this Article in English**

**Monisha. J.S "Self and imagery in the Ainkurunuru poems – based on Jacques Lacan"** *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 1, January 2026, pp. 11-16*